4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 403/2018 நாள்: 04.03.2025 வா.சா.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுகுணலதா | தொழில் | : இல்லத்தரசி |
| க/பெ | : ராமநாதன் | கிராமம் | : திருப்பூர் |
| வயது | : 57 | தாலுகா | : திருப்பூர் |
| | | மாவட்டம் | : திருப்பூர் |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

முதல் விசாரணை -

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

வா.சா.ஆ.1 – 16.09.2015 தேதியிட்ட ஜக்கம்மா நாயக்கர் பெயரிலுள்ள விடுதலை பத்திரத்தின் சான்று நகல்

வா.சா.ஆ.2 – 20.12.1925 தேதியிட்ட ஜக்கம்மா நாயக்கரின் 2வது மனைவி, மைனர் மகன்களின் சார்பாக, பெரியமுத்துசாமி நாயக்கர் என்பவருக்கு எழுதிக்கொடுத்த அடமான பத்திரத்தின் சான்று நகல்

வா.சா.ஆ.3 – 01.03.1960 தேதியிட்ட ரங்கசாமி நாயுடுக்கு நீதிமன்றம் ஏற்படுத்திக்கொடுத்த விற்பனை சான்றிதழ் சான்று நகல்

வா.சா.ஆ.4 – 14.11.1975 தேதியிட்ட எனது தாயார் சிவானந்தவள்ளி பெயருக்கு ரெங்கசாமி நாயு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்று நகல்

வா.சா.ஆ.5 – 25.06.2009 தேதியிட்டஎனது பெயருக்கு, எனது தாயார் சிவானந்தவள்ளி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்று நகல்

வா.சா.ஆ.6 – 26.09.2018 தேதியிட்ட வழக்கு சொத்திற்கு எனது பெயரில் உள்ள கனிணி பட்டா

வா.சா.ஆ.7 – எனது பெயரில் மின் கட்டண இணைப்பு எண்.96க்கு மின் கட்டணம் செலுத்திற்குண்டான கணக்கு அறிக்கை

வா.சா.ஆ.8. – 15.09.2018 தேதியிட்ட மாவட்ட பதிவாளர் அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சம்மன், மாவட்ட பதிவாளர் அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மனு மற்றும் கோபிசெட்டிபாளையம் தனி வட்டாட்சியர் வழங்கிய உத்தரவு

வா.சா.ஆ.9 – உடுமலைபேட்டை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.82/2019 வழக்கின் பிராது அலுவலக நகல்

வா.சா.ஆ.10 – உடுமலைபேட்டை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.82/2019 வழக்கின் எதிர்வழக்குரையின் அலுவலக நகல்

வா.சா.ஆ.11 – உடுமலைபேட்டை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.82/2019 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் சான்று நகல்

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–C.Rajalingom
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.